துதிக்கிறோம் துதிக்கிறோம்



We Praise! We Praise!

Jai Jesus Christ Song 1

All glory to Jesus Christ

75 சங்கீதம்

துதிக்கிறோம் துதிக்கிறோம்
கர்த்தாதி கர்த்தரை துதிக்கிறோம்
துதிக்கிறோம் துதிக்கிறோம்
ராஜாதி ராஜனை துதிக்கிறோம்

ஒருவனைத் தாழ்த்தி ஒருவனை உயர்த்தும்
தேவன் ஒருவரே நியாயத்தின் அதிபதி (துதிக்கிறோம்)

கர்த்தரின் நாமம் இங்கே சமீபமானதே
அதிசயமானவைகளை செய்யும் அற்புதரே (துதி)

நியமித்த காலத்திலே தேவனே நீர் வருவீர்
பூமியின் குடிகளை யதார்த்தமாய் நியாயம்தீர்ப்பீர் (துதி)

பூமியின் அஸ்திபாரங்கள் தேவனால் போடப்பட்டது
அவற்றில் தூண்களை கர்த்தரே நிறுத்துகிறார் (துதி)

துன்மார்க்கரின் கொம்புகளை கர்த்தரே வெட்டுவார்
நீதிமானின் கொம்புகளோ அவராலே உயர்த்தப்படும் (துதி)

HALLELUJAH

